பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 15 [illegible] 19 இதழ் 76

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28 4 78

LALA SOAP
V.P.V
LALA SOAP INDUSTRY ATCHUVELY
லாலா
இனிநீங்கள்
வாங்கிப் பாவியுங்கள்
லாலா நீல சோப்
எல்லாக் கடைகளிலும் விற்பனையாகின்றது.
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி. தரன்

ஆப்கானிஸ்தானில்
ராணுவப்புரட்சி: தாவூத் அரசு வீழ்ச்சி

புதுடில்லி ஏப். 27 ஆப்கானிஸ்தானில் ராணுவப்புரட்சி ஒன்று ஏற்பட்டு ஜனாதிபதி தாவூதின் அரசு கவிழ்க்கப்பட்டுவிட்டதாக இங்கு மிகபிந்திக்கிடைத்தசெய்தியொன்று கூறியது.

(6ம் பக்கம் பார்க்க)

S. GANNEN

தலைநகரைத் தவிர
மேதின ஊர்வலங்களை வெளியூர்களில் நடத்தத்தடை!

ஜனாதிபதி-பிரதமருடன்பேச அமிர் கொழும்பு செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

மேதினத்தன்று கொழும்பைத் தவிர வெளியூர்களில் ஊர்வலங்கள் நடத்துவதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆனால் மேதினக் கூட்டங்கள் நடத்துவதற்குஎதுவித கட்டுப்பாடும் இல்லை

மேதினத்தன்று கொழும்பு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் ஊர்வலத்திற்கு அரசு தடைவிதித்துள்ளது.

எதிர்வரும் மேதினத்தன்று கூட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்துவதற்கு தொழிற்சங்கங்கள் ஆயத்தம் செய்துகொண்டிருக்கும் வேளையில் ஊர்வலங்களுக்குத் தடைவிதித்திருக்கும் செய்தி தொழிலாளர் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஊர்வலங்கள் தடைசெய்யப்பட்டபோதும் கூட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதால் திட்டமிட்டபடி தொழிற்சங்கங்களின் கூட்டங்கள் இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை லொறிகளில் மக்கள் பயணம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. கடந்தகாலங்களில் மேதின ஊர்வலங்களுக்கு மக்கள் லொறிகள்மூலம் திரட்டப்பட்டது தெரிந்ததே.

மேதினத்தன்று சினிமா தியேட்டர்களில் குறைந்த கட்டணத்தில் படம் காட்டப்படும்.

அன்று காலையில் 9-30மணிக்கு தியேட்டர்களில் படக்காட்சிகள் ஆரம்பமாகும். கலரி தொடக்கம் பல்கனி தவிர்ந்த எல்லா வகுப்புகளுக்கும் 50 சதமே அறவிடப்படும். பல்கனிக்கு மாத்திரம் ஒரு ரூபாய் எடுக்கப்படும். அன்று முழுவதும் எல்லாக்காட்சிகளுக்குமே இந்தக் குறைந்த கட்டணம் அறவிடப்படும்.

இதற்கான டிக்கட்டுகளைப் திரைப்படக் கூட்டுத்தாபனம் தியேட்டர்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

'அமிர்' கொழும்பு செல்கிறார்

ஊர்வலங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டதை நீக்கும்படி பிரதம மந்திரியிடமும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தனவிடமும் வற்புறுத்துவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று கொழும்பு விரைகிறார்.

கொழும்பில் அங்கீகரிக்கப்பட்ட 9 அரசியல் கட்சிகளின் தொழிற்சங்கங்களுக்கு மேதின ஊர்வலம் நடாத்த அனுமதியளிக்கப்பட்டு, தமிழ்த்தொழிலாளர்களுக்கு மட்டும் யாழ்ப்பாணத்தில் ஊர்வலம் நடாத்த அனுமதி வழங்கப்படாமல் விடுவது அநீதியானது என தமிழர் தொழிற்சங்கக் கூட்டணி செயலாளர் திரு. ஐ. சம்பந்தன் நேற்று கூறினார்.

தமிழர் மேதின ஊர்வலத்தை தமிழரின் பிரதேசமான யாழ்ப்பாணத்தில் நடாத்த சகல நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவருவதாக திரு. ஐ. சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார்.

சன்சோனிக் கமிஷன் சாட்சி
பயமுறுத்தப்பட்டாராம்
கமிஷனரிடம் தேரோ புகார்

[அனுராதபுரம்]

அனுராதபுரத்தில் விசாரணை நடத்திவரும் சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் நேற்று முன்தினம் சாட்சியமளித்த விமலதாசா என்ற டிராக்டர் சாரதியை சுப்பிரமணியம் என்ற டிராக்டர் முதலாளியின் மகன் வவனியாவில் வைத்துப் பயமுறுத்தினார் என்று கமிஷனர் திரு. சன்சோனியிடம் நேற்று புகார் செய்யப்பட்டது.

கமிஷன்முன் சுப்பிரமணியத்திற்கு எதிராகச் சாட்சியமளித்தமைக்காகவே விமலதாசா பயமுறுத்தப்பட்டார் என்றும் நேற்றுச் சாட்சியமளித்த இரத்தினசாரதேரோ கமிஷனிடம் புகார் செய்தார்.

யாழ்ப்பாணத்தில் விசாரணை நடைபெற்றபோதும் இங்கும் அநேகர் சாட்சியமளித்துள்ளனர். இதுவரை இப்படியான புகார்கள் ஏதும் எனக்குக் கிடைக்கவில்லை. இப்புகார் எனக்கு அதிர்ச்சியைத் தருகிறது. இப்படியான சம்பவம் ஒன்று நடந்திருக்குமானால் அது கமிஷனை அவமதிப்பதாகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கும் என்று கமிஷனர் இப்புகார்மீது கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

இதுகுறித்து பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொள்வர் என்றும் திரு. சன்சோனி கூறினார். [க-இ]

"58-ம் ஆண்டுக்குப் பின்பு
தமிழ் அரசாங்க ஊழியர்க்கு சிங்களவர் மீது வெறுப்பு'
சன்சோனிக்கமிஷன்முன் தேரோசாட்சியம்

(அனுராதபுரம்)

''வவனியாவில் தமிழரும், சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தவர்கள். 1977 பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ்நாடு கோஷமெழுப்பி நடத்திய சிங்களவர் விரோத பேச்சுக்களால் இந்த ஒற்றுமை சிதைந்தது''

இவ்வாறு தற்போது அனுராதபுரத்தில் நடைபெற்றுவரும் சன்சோனி விசாரணைக் கமிஷன் முன் மடுகந்த ஸ்ரீ தலதா விகாரையைச் சேர்ந்தவரும் உறுவத்துகொடையை பிறப்பிடமாகக் கொண்டவருமான ரத்னசாரதேரோ (வயது 49) நேற்று சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் தமது சாட்சியத்தில் சொன்னதாவது:

வவனியாவில் இருந்து இரு மைல் தொலைவில் எமது விகாரை இருக்கிறது. தமிழர் விடுதலைக்கூட்டணியின் மகாநாடு நடைபெறுவதற்கு (1977க்கு)முன் தமிழரும் சிங்களவரும் ஒற்றுமையாக இங்கு வாழ்ந்து வந்தோம். சுகதுக்கங்களில் பங்கு பற்றினோம்.

தமிழ்நாடு பிரசாரம்

1977 தேர்தல் பிரசாரத்தின் போது சிங்களவருக்கு விரோதமாக தமிழர் விடுதலைக்கூட்டணியினர் பிரசாரம் செய்தனர். 'தமிழ்நாடு' காண வேண்டும் என்று அவர்கள் பிரசாரம் அமைந்தது.

சிங்களவர்க்கு விரோதமான தமிழ்வெறி பேச்சுக்களைத் தூண்டும் வகையில் அவர்கள் உரை நிகழ்த்தினர்.

அரசு ஊழியர் பாரபட்சம்

வவனியாவில் கடமையாற்றிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் பாரபட்சமாகக் கடமையாற்றினர்கள்.

58 ம் ஆண்டுக்குப் பின் இந்நிலை ஏற்பட்டது.

தமிழருக்கு ஆதரவாகவும் சிங்களவர்க்கு விரோதமாகவும் பாகுபாடு காட்டி அவர்கள் செயற்பட்டார்கள்.

புளியங்குளத்தில் தமிழர்க்கு மட்டுமே காணிகள் வழங்கப்பட்டன.

'வெளியேறவேண்டிய நிலை''

இத்தகைய நடவடிக்கைகளால் வவனியாவில் உள்ள சிங்களவர்கள் பாதிக்கப்பட்டார்கள். வவனியாவை விட்டு வெளியேறவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.

1977 ஆகஸ்ட் கலவரத்தின்போது எமது விகாரையில் 400 அகதிகள் தஞ்சம் புகுந்தனர். இதில் தமிழ் அகதிகளும் இருந்தனர்.

இந்த அகதிகள் தச்சன் குளத்தில் இருந்து வந்தனர்.

கலவரத்தின்போது வவனியாவில் சிங்களவர் பொருட்கள் பெற்று வந்த கூட்டுறவுச் சங்கக்கடை மூடப்பட்டது' தமிழரின் கூட்டுறவுச் சங்கக்

[6-ம் பக்கம் பார்க்க]

தேவை

பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் ஜனதா ஸ்பெஷல் பீடி சுற்றுவதில் அனுபவம் உள்ள பெண் தொழிலாளர் தேவை. கூலி 1000 பீடிக்கு ரூபா 7-50. மேலும் ஜனதா ஸ்பெஷல் பீடி தயாரிக்க பெண் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படும். ஜனதாஸ்பெஷல்பீடி சுற்றவிரும்புவோரும் பீடி சுற்றப்பழகவிரும்புவோரும் உடன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில்வரவும். பவான்ஸ் பீடித் தொழிற்சாலை, சந்திரபவனம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 9135

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல 84 அ — பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் காலஞ்சென்ற யாழ்ப்பாணம், கந்தர்மடம், அரசடி றோட்டு, இல. 1204, கந்தையா பரமானந்தன் என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

கந்தையா பரமானந்தன் கைம்பெண் பரமேஸ்வரி 1204, அரசடி றோட்டு, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: த. 3358.

1. பரமானந்தன் மகள் சியாமளா, 1204, அரசடி றோட்டு கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
2. பரமானந்தன் மகள் மஞ்சுளா டிை
3. பரமானந்தன் இராகுலன் [பராயமற்றவர்] டிை
4. பரமானந்தன் மகள் மிதிலா டிை [பராயமற்றவர்]

3-ம், 4-ம் எதிர்வாதிகளின் பாதுகாவலர் 1 ம் எதிர்வாதி எதிர்வாதிகள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மரணசொத்தை நிர்வகிப்பதற்காகமேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள், எவரும் 1978ஆம் ஆண்டு வைகாசி மீ 3-ஆந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி;

பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

வரைவு
இ. சிவசுப்பிரமணியம்,
மனுதாரர்

1978-ம் ஆண்டு சித்திரை மாதம் 10-ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

9089

கல்வி

தனிப்பட்ட முறையாகவோ அல்லது வீடுகள் சென்று ஆங்கில இலக்கண, இலக்கியம் (Kmma Mc Beth) பேச்சு Spoken English கற்றுக் கொடுக்கப்படும். விளம்பர இல. 8920 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 8920

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் அவனியூ 3-ம் இலக்கம் "பெதேனி" யைச் சேர்ந்த நைனு ஜோர்ஜ் என்பவரின் மரணசாதனம் சம்பந்தப்பட்ட விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3341

நைனு ஜோர்ஜ் கைம்பெண் பமீலா ஜேசரி பெதேனி 3 சோமசுந்தரம் அவெனியு சுண்டிக்குளி. யாழ்ப்பாணம்.

மனுதாரர்

எதிர் பராயமற்றவர்

1. ஏஞ்சலோ ஜெபரஞ்சன்
2. பேபி ஜெபரஞ்ஜினி
3. மேர்வின் ஜெபநேசன்
4. நோயல் ஜெபசீலன்
5. ஹரி ஜெபபிரியன்

எல்லோரும் பராயமற்றவர்கள் தங்கள் பாதுகாவலர் 6-ம் எதிர்வாதி மூலமாக

பாதுகாவலர்: 6, அல்பேட் இளையதம்பி அரசரத்தினம் 3, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 3-ந் திகதி (3-5-78) முற்பகல் 10-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1978-ம் ஆண்டு சித்திரை மாதம் 25-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஒப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

வரைதல்
கந்தையா சற்குணநாதன்,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்,
மனுதாரரின் சட்டத்தரணி

9140

வேலைவாய்ப்புக்கள்

விரைவில் யாழ்நகர எல்லைக்குள் ஆரம்பிக்கப்படவிருக்கும் பெற்றோல் நிரப்பு நிலையத்திற்கு மனேஜரும், பெற்றோல் நிரப்புபவர்களும், இரவு காவலாளியும் தேவை பெற்றோல் நிரப்புவதற்குப் பெண்களும் விண்ணப்பம் செய்யலாம். பெற்றோல் நிரப்புவதற்குப் பயிற்சி அளிக்கப்படும் விண்ணப்பம் செய்ய விரும்புவோர் 29-4-78 சனிக்கிழமையும் 30-4-78 ஞாயிற்றுக்கிழமையும் காலை 9-00 மணிக்கும் 12-00 மணிக்குமிடையில் இல 1, செட்டித்தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரில் வரவும். மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இல: 7615. 9127

வரி விளம்பரம்

தேவை

யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் இரண்டு அல்லது மூன்று அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவை. கடிதமூலம் தொடர்பு கொள்க. விபரம் நேரில். ரி. ஸ்ரீஸ் செல்வராசா, 35, கதிர்ரல் வீதி, யாழ்ப்பாணம். 9152

பிஸ்கட் வெட்டுவதிலும் பக்கட்டில் அடைப்பதிலும் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் உடன் நேரில் வரவும். நியூ பாரத் பேக்கரீஸ், 86, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9137

யாழ். நகரிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனமொன்றிற்கு தகுதியும் அனுபவமுள்ள மருந்தாளர் [Pharmacist] தேவை. தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 9124 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 9124

வவுனியாவிலுள்ள வியாபார ஸ்தாபனத்துக்கு பத்து வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுடைய வான் சாரதி தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9082 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9082

கெட்டர் மிகத் திறமையான முறையில் திருத்திக் கொடுக்கக்கூடிய ஒருவர் உடன் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். றட்ணம்ஸ், பலாலி வீதி, கோண்டாவில் சந்தி. 9141

வேப்பம்பூவைசேகரித்துலாபம் பெறுங்கள். தகுந்த விலைக்கு பெற்றுக்கொள்கிறோம். உடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ தாமோதர விலாஸ், 239, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 9151

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம்சுண்டிக்குளி சோமசுந்தரம் அவெனியு, 4ம் இலக்கத்தைச் சேர்ந்த சிவானந்தன் கைம்பெண் அம்பரெத்தினம் என்பவரின் மரணசாதன விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல: 3340

யாழ்ப்பாணம் பலாலி வீதி 51ம் இலக்கத்தைச் சேர்ந்த கதிரவேலுப்பிள்ளை சபாரத்தினம்.

மனுதாரர்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணம் எய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978 வைகாசி 19ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
பொ. பாக்கியநாதன்
9142 பதிவாளர்
1978 சித்திரை 5ந் திகதி

கல்வி

G.C.E. (O/L) 1978 மார்கழி, G.C.E. (A/L) 1979-80 கலை, விஞ்ஞான, வர்த்தக வகுப்புகள் 3-5-78ல் ஆரம்பமாகவுள்ளன. 1978ம் ஆண்டு G. S. Q. பரீட்சைக்கு உயிரியல், பௌதிகம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன விஞ்ஞான பாடங்களுக்குரிய செயன்முறைப் பயிற்சிகள் வித்தியாலய ஆசிரியரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. விபரத்திற்கு அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியோடு தொடர்பு கொள்க. 9149

விற்பனைக்கு

திண்டுக்கல் இரும்புப்பெட்டி 3 அடி உயரமுள்ளது. உடன் விற்பனைக்குண்டு விபரங்கட்கு சிற்றம்பலம் & சன்ஸ், நெல்லியடி. 9136

ஒஸ்டின் A-50, EN 9700 ஒருவர் பாவித்தது. ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 9148

தேவை

அனுபவமிக்க அச்சுக்கோப்பாளர்கள் தேவை. நேரில்வந்து சந்திக்கவும். திருமகள் அழுத்தகம், சுன்னாகம். 9131

ஹோமியோபதி வைத்திய சங்கம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா ஹோமியோபதி வைத்திய சங்கக்கூட்டம் யாழ். மணிக்கூட்டு வீதியிலுள்ள ஹோமியோபதி வைத்திய சாலையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: டாக்டர் தி. பரமசிவம், செயலாளர் டாக்டர் செல்வி அ. ந. வீரசிங்கம், பொருளாளர் டாக்டர் கா. கணேசன் நிர்வாகசபைஉறுப்பினர்கள் டாக்டர் வ சிவகுருநாதபிள்ளை, எம். பொன்னம்பலம், செல்வி. க விமலாதேவி, செல்வி செ. பற்றிமா, வண. பிதா பற்றிக் ஞானப்பிரகாசம்.

ஹோமியோபதியின் வளர்ச்சிக்கு ஏப்ரல் மாதத்திலிருந்து சஞ்சிகை ஒன்றை ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (இ)

திருமண அழைப்பு

நிகழும் காலயுத்தி வருடம் சித்திரைமாதம் 18ம் திகதி திங்கட்கிழமை [1-5-78]. மாலை 3-30 மணி முதல் 6-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

எனது புத்திரன் திருநிறை செல்வன் **சந்திரசிவம்** [மின்பொறியியலாளர் இங்கிலாந்து] அவர்களுக்கும்	எங்கள் புத்திரி திருநிறை செல்வி **நிரஞ்ஜினி** [யாழ். வளாகம்] அவர்களுக்கும்

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திருவருள் துணையால் நிகழவிருக்கும் திருமண வைபவத்தில் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம்;

இங்ஙனம்

திருமதி சரஸ்வதி கனகராஜா [காலஞ்சென்ற M. கனகராசா கட்டிடப்பகுதி உதவி இயக்குனர்] 9, சங்கிலியன் வீதி, நல்லூர்.	க. இலங்கராசாவும் பாரியாரும் [வேலை மேற்பார்வையாளர் நெடுஞ்சாலைத் திணைக்களம் மானிப்பாய்] ஐயனார் கோவில் வீதி, சண்டிலிப்பாய்.

9147

நினைவாஞ்சலி

வைத்திய கலாநிதி
செல்வத்துரை

வட்டுக்கோட்டை
சங்கரத்தை

தோற்றம்
17-04-1907

மறைவு
30-3-1978

(9164)

மரண அறிவித்தல்

அந்தோனிப்பிள்ளை (கதிரவேலு)

யாழ். 21, அடப்பன் வீதி திரு: அந்தோனிப்பிள்ளை (கதிரவேலு) புரோக்கர் 26-4-78 இறைவனடி சேர்ந்துவிளார். இவர் திருமதி அன்னம்மாவின் கணவரும் திருமதி யோசேப்பின் பேபிஸ் ஆசிரியை, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம், திரு. P. A. பிலிப்ஸ் இளைப்பாறிய சமூக சேவை உத்தியோகத்தர். திரு. ஜேம்ஸ் அரச காகித உற்பத்திக் கூட்டுத்தாபனம், கொழும்பு. திரு. மரியதாஸ் பதிவுபெற்ற வைத்தியர், பண்டத்தரிப்பு வைத்தியசாலை. திருமதி றெஜீனா தொம்மைக்குட்டி அடப்பன் றோட், யாழ்ப்பாணம். சங்கைக்குரிய சகோதரி றூபினா கார்மேல் சபை ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 28-4-78 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் 21, அடப்பன் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

9156

ஈழநாடு
The Eelanaadu

மட்டக்களப்பு வளாகம்

மட்டக்களப்பில் பல்கலைக்கழகவளாகம் அமைக்கப்படவேண்டுமென்றும் இந்த வளாகம் வந்தாறுமூலை மகாவித்தியாலயத்தில் அமைக்கப்படவேண்டுமென்றும் இதுபற்றி ஆராய்ந்த டாக்டர் அப்பாபிள்ளை தலைமையிலான குழு சிபார்சு செய்திருக்கிறது.

இந்த வளாகத்தின் மருத்துவபீடத்தை மட்டக்களப்பு ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் அமைக்கலாமென்றும் இந்தக்குழு தெரிவித்திருக்கிறது.

மட்டக்களப்பில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென்பது நீண்டகாலக் கோரிக்கையாகும். அங்கு பல்கலைக்கழகம் அமைக்கப்படுமென்று பல தடவைகளிலும் வாக்குறுதியளிக்கப்பட்டு வந்திருக்கிறது.

பல்கலைக்கழக துணைவேந்தர் நியமித்த டாக்டர் அப்பாபிள்ளையைத்தலைவராகக் கொண்ட குழு பத்துக்கோடி ரூபா செலவில் ஐந்து வருடகால எல்லைக்குள் மட்டக்களப்பில் பல்கலைக்கழக வளாகம் அமைப்பதற்குச் சிபார்சு செய்திருக்கிறது.

இந்தக்குழுவின் சிபார்சு அறிக்கையாகவே இருந்துவிடாமல் விரைவில் செயல்படவேண்டும்.

மட்டக்களப்பில் அமைக்கப்படும் வளாகம் விரைவில் பூரணத்துவம் வாய்ந்த ஒரு பல்கலைக்கழகமாக உருவாக வேண்டும்.

வந்தாறுமூலை மகாவித்தியாலயம் பல்கலைக்கழகவளாகம் அமைப்பதற்கு மிகப் பொருத்தமான இடமேயாகும். அதேசமயம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு வேறுபொருத்தமான இடம் உருவாக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

மட்டக்களப்பு வளாகம் பூரணத்துவமுடைய பல்கலைக்கழகமாக உருவாகும் வரை அந்த வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருப்பதே பல வழிகளிலும் பொருத்தமாகும்.

மட்டக்களப்பு வளாகத்தின் விவசாயப்பிரிவு அம்பாறையிலுள்ள ஹார்டி நிறுவனத்தில் அமைய வேண்டுமென்றும் அப்பாபிள்ளை குழு சிபார்சு செய்திருக்கிறது. இதுவசதியான இடமாக இருந்தாலும் வந்தாறுமூலை வளாகத்தின் விவசாயப்பிரிவு அம்பாறையில் அமைவது மாணவர்களுக்கும் வளாக நிர்வாகத்தினருக்கும் சிரமமாகவே இருக்கும்.

மட்டக்களப்புப் பகுதி கல்வியில் பின்தங்கியநிலையிலேயே இருந்துவந்திருக்கிறது. வடபகுதியில் போல சகலவசதிகளுமுள்ள பெரிய கல்லூரிகள் அதிகமில்லை. இதனால் மட்டக்களப்புப் பகுதியிலிருந்து பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் மாணவர் தொகை மிகக்குறைவு.

மட்டக்களப்பில் பல்கலைக்கழகவளாகம் அமைவது மட்டக்களப்புப் பகுதியில் மட்டுமல்லாது கிழக்கிலங்கையிலேயே கல்விவிருத்தி அடைவதற்கு வழிவகுக்குமென்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

கூட்டணியினரின் மேடைப்பேச்சுக்கள்

சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில் துவேஷத்தை கிளப்பியது

குறுக்கு விசாரணையில் மெக்கானிக் சாட்சியம்

(அனுராதபுரம்)

"தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தேர்தல் மேடைப் பேச்சுக்கள், நீண்ட நாட்களாகச் சகோதரர்களாக வாழ்ந்துவந்த தமிழ்-சிங்கள மக்கள் மத்தியில் துவேஷத்தைத் தூண்டிவிட்டது. தேர்தல் கூட்டங்களுக்குப் பின், தமிழ்-சிங்கள மக்களிடையே ஒற்றுமை மறையத் தொடங்கியது. தமிழ் வியாபாரிகள் சிங்கள மக்களுக்குச் சாமான் விற்க மறுத்தனர்."

இவ்வாறு அனுராதபுரத்தில் நடைபெற்றுவரும் சன்சோனி கமிஷன் விசாரணையின்போது சாட்சியமளித்த வவனியாவைச் சேர்ந்த கார் மெக்கானிக் டொன் செனிவரத்ன கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

சாராயம் கடத்தியதாக வழக்கு

"எனது வீட்டின் அறையொன்றில் விருத்தாசலம் என்பவர் யானை மார்க் சோடா வியாபாரம் செய்துவந்தார். அவர் சிங்களவருக்கு எதிராகத் தேர்தலில் வேலைசெய்துவந்ததால், அவரை வெளியேறுமாறு கூறினேன். தேர்தல் காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகரான திரு. சிவசிதம்பரத்தின் ஜீப்பில் பெர்மிட் இல்லாமல் பெற்றோல் கடத்தியதாக 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. தேர்தல் காலத்தில் சாராயம் கடத்தியதாக விருத்தாசலத்திற்கு 50 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கடைக்குள் பெற்றோல் குண்டுகள்

"எனக்கும் விருத்தாசலத்திற்கும் உள்ள கடைப் பிரச்னை கோட்டிற்கு வந்தது. விசாரணை முடியும்வரை கடையைப் பூட்டிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. பின் நீதவான் வந்து கடையை உடைத்துப் பார்த்தபோது அங்கு புத்தகத்திற்குள் 5 பெற்றோல் குண்டுகள் காணப்பட்டன. இது ஆவணி கலவரத்திற்கு ஒரு மாதத்தின் பின் நடந்தது.

"தேர்தலுக்கு முன் பாவற்குளத்திற்கு ஜீப்பில் சென்றேன். வழியில் பெற்றோல் இல்லாமல் ஜீப் நின்றுவிட்டது. அப்போது எம். பி. சிவசிதம்பரத்தின் கார் வந்தது. காரை மறித்துக் கொஞ்சம் பெற்றோல் தந்துதவுமாறு கேட்டேன். அவர் பெற்றோல் இல்லையென்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார். சிவசிதம்பரம்தான் ஜீப்பை ஓட்டிவந்தார். முன் சீட்டில் எஸ். ஐ. நாதனின் மூத்த மகன் இருந்தார். எனக்கு எஸ். ஐ. நாதனைத் தெரியும். பின் ஆசனத்தில் வேறு ஆட்களும் இருந்தனர்.

தேர்தலுக்குப் பின் பஸ்ஸில் ஒரு கூட்டத்தினர் வந்தனர் வி. சி. ஓ. நடராசா, சிங்களவர் தமிழரைக் கொல்லவும், கடை உடைக்க வந்திருப்பதாகவும் கூறினர்.

அரச சட்டத்தரணி தென்னக்கோன் செனிவரத்னவை குறுக்கு விசாரணைசெய்தார்.

சட்: கலவரத்தின்போது ஊரடங்குச் சட்டம் இருந்தது?-ஆம்.

சட்: எப்படி அந்நேரத்தில் வெளியில் வந்தீர்?-அதிகமான சம்பவங்களை என் வீட்டு வளவில் இருந்து பார்த்தேன். சில சம்பவத்தை மக்களுடன் போய்ப் பார்த்தேன்.

சட்: ஊரடங்குச் சட்ட நேரத்தில் ஆட்கள் நடமாடினார்களா?-ஆம்.

சட்: கூட்டணிக் கூட்டங்களில் சாதாரணமாக வவனியாச் சிங்களவர்கள் பற்றிக் கூறப்பட்டதா?-ஆம்.

சட்: தேர்தலுக்கு முன் இரு இனங்களுக்குமிடையில் நிலவிய நிலைமை என்ன?-தேர்தலுக்கு முன் ஒற்றுமையாக இருந்தனர். கோபதாபம் இல்லை. சகோதரர்கள் போல் வாழ்ந்தனர். அமைதியாக வாழ்ந்தோம்.

சட்: எம். பி. சிவசிதம்பரமும், திருமதி மங்கையர்க்கரசியும் பேசிய பேச்சுக்கள் தமிழ் மக்களைச் சிங்களவருக்கு எதிராகத் தூண்டிவிட்டதா?-சகோதரர்களாக வாழ்ந்த மக்கள் மத்தியில் அப்பேச்சு துவேஷத்தைத் தூண்டிவிட்டது. தேர்தல் கூட்டங்களுக்குப் பின் ஒற்றுமை மறையத் தொடங்கியது. தமிழர், சிங்களவர்களுக்குச் சாமான்கள் விற்க மறுத்தனர். இதற்குக் காரணம் கூட்டணியினரின் மேடைப் பேச்சுத்தான்.

தமிழரால் ஆபத்து வருமென அஞ்சினோம்

சட்: இதனால் தமிழரால் ஆபத்துவருமெனச் சிங்கள மக்கள் அச்சத்துடன் வாழ்ந்தனர்?--ஆம். தங்கள் உயிருக்கு ஆபத்தெனச் சிங்களவர் பயந்தனர். அவர்கள் அப்பகுதியில் சிறுபான்மையினராக வாழ்ந்தனர்.

வவனியா கலவரத்துக்கு

எம். பி. சிவசிதம்பரமும் எஸ்.ஐ.நாதனுமே காரணம்

சட்: எம். பி. சிவசிதம்பரமும், எஸ். ஐ நாதனும் நினைத்திருந்தால் அரை மணித்தியாலத்தில் குழப்பத்தை நிறுத்தியிருக்கலாம்?-ஆம்.

சட்: வவனியா மாவட்டத்தில் ஏற்பட்ட கலவரத்திற்கு பதட்டத்திற்கு எம். பி சிவசிதம்பரமும், எஸ். ஐ. நாதனும் தான் காரணமாகும்?-ஆம்.

சட்: பாரிலட்! வவனியாவில் நீண்ட காலமாக இருக்கிறீர்? ஆம்.

சட்: 51 வருடமாக இருக்கிறீர்?-ஆம்.

சட்: உமக்கு அரசியல் தொடர்புண்டா?-நான் யு. என். பி. ஆதரவாளன். 1970ம் ஆண்டு வவனியாவில் யு என். பியில் போட்டியிட விண்ணப்பித்தேன் எனக்கு டிக்கட் கிடைக்கவில்லை. நான் யு. என் பி. அபேட்சகர் சுனேந்திரனுக்காகப் பாடுபட்டேன்.

சட்: தேர்தல் கூட்டங்கள் பொலிஸாரினால் குறிப்பு எடுக்கப்படுவது தெரியுமா?—ஆம்.

சட்: ஒவ்வொரு தேர்தல் கூட்டப் பேச்சுக்களை பொலிஸார் எடுப்பார்கள். அவர்கள் அனுமதியின்றி கூட்டம் நடத்த முடியாது?-ஆம்.

சட்: நீர் இங்கு குறிப்பிட்ட கூட்டங்களில் நடந்த பேச்சுக்கள் யாவும் பொலிஸாரினால் குறிப்பு எடுக்கப்பட்டது?-சில கூட்டங்கள் எடுக்கப்பட்டது.

சட்: பாலட்! அப்டஹாமியும், இவரும், வவனியா கூட்டணி கூட்டம் பேச்சுபற்றி கூறியுள்ளார்கள், அக்கூட்ட பேச்சுகள் வவனியா பொலிஸ் குறிப்பு எடுத்துள்ளார்கள். அப்பேச்சு குறிப்புகளை இங்கு சமர்ப்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

சட். தென்னகோன்: தான் ஏற்கனவே பொலிஸாருக்கு தயாராக இருக்குமாறு அறிவித்துள்ளேன். கூட்ட குறிப்பு எடுத்த பொலிஸார் அதனை கூறுவார்கள்.

சட்: எம். பி. சிவசிதம்பரத்தை வவனியாவிலுள்ள சுதந்திர கட்சியை சேர்ந்த சிங்களவர்கள் ஆதரித்தது தெரியுமா?-தெரியாது.

மங்கையர்க்கரசி கூறியதை மறைக்கப்பார்க்கிறீர்கள்

சட்: சிங்களவருக்கு எதிராக, சிவசிதம்பரமோ, திருமதி மங்கையர்க்கரசியோ,எதுவும் கூறவில்லை என்கிறேன்?-நீங்கள் அவர்கள் கூறியதை மறைக்கப் பார்க்கிறீர்கள் (சிரிப்பு).

சட்: அப்படி அவர்கள் பேசவே இல்லை?-பேசினார்கள்

சட்: திருமதி மங்கையர்க்கரசி, பேசியதாக இங்கு கூறினீர்?-ஆம்.

சட்: அப்படி அவர் பேசவில்லை?

சட்: கலவரத்தில் நீர் எவ்வித பாதிப்பும் அடையவில்லை?-இல்லை.

சட்: காயம் ஏற்படவில்லை?-நான் மனைவி பிள்ளைகளை பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பி விட்டேன். நான் வீட்டில் இருந்தேன்.

சட்: ஊரடங்கு சட்ட நேரத்தில் மக்களுடன் வெளியில் ஓடினீர்? ஆம்.

எதிர்காலப் பாதுகாப்புக்காக. சாட்சியம்

சட்: நீர் நஷ்டஈடு கோரி இங்கு வரவில்லை?- கூட்டணி கூட்டங்களில் சிங்களவர்களுக்கு மாறாக பேசப்பட்டதால் அதைக் கூறவந்தேன். வவனியாவில் எங்கள் எதிர்காலப்பாதுகாப்புக்காக சாட்சியமளிக்கவந்தேன். தனிப்பட்ட காரணத்திற்கல்ல.

சட்: தமிழர் தங்கள் வீடுகளை கொளுத்தினார்களா?- தமிழர்களுக்கிடையில் உள்ள எதிரிகள் கொளுத்தியிருப்பார்கள்.

கமிஷனர்: யார் எதிரிகள்? தமிழருக்குள் தமிழர் எதிரிகளா இருக்கின்றனர்.

சட்: கலவரத்தில் வவனியாவில் உள்ள தமிழர் கடைகள் எரிந்து கொள்ளையடிக்கப்பட்டது தெரியுமா? எரிப்பதற்கு முன் கடையில் சாமான்களை அப்புறப்படுத்திவிட்டார்கள்

சட்: கடைக்காரர்கள் தான் தங்கள் கடைகளை எரித்தார்களா? எனக்குத் தெரியாது. கடைகள் எரிந்தது தெரியும்

சட்: தமிழ்க்கிராமம் முற்றாக எரிந்தது தெரியுமா? முழுவதும் எரியவில்லை. சில வீடுகள் உண்டு.

சட்: மாமடுவில் 4 தமிழ் வீடுகள் உண்டு? ஆம்.

சட்: அங்குசுப்பிரமணியம்வீடு எரிந்தது? ஒரு பகுதி எரிந்தது.

சட்: எப்படி எரிந்தது? எனக்குத்தெரியாது.

சட்: சுப்பிரமணியம் எரித்தாரா? தெரியாது

கமிஷனர்: யாரும் தீவைத்ததைக் கண்டீரா? இல்லை.

சட்: இன்ஸ்பெக்டர் நாதனை பற்றித்தான் பெரும்பாலும் கூறினீர்? ஆம்.

தமிழரின் சடலத்தை 100 பேருக்கு நாதன் காட்டினார்

சட்: அனுராதபுரத்திலிருந்து நாதன் தமிழர் சடலத்தை கொண்டுவந்தபோது வழியில் பெட்டியைத் திறந்து 100 பேருக்குக்காட்டினாரா? ஆம் நானும் பார்த்தேன்.

சட்: என்ன சொன்னார்? "என்னடா நீங்கள் பார்த்துகொண்டு சும்மா இருக்கிறீர்கள். அனுரதபுரத்து சிங்கள நாய்கள், எங்கள் தமிழ் ஆட்களுக்கு செய்திருக்கிறவேலையை பாருங்கள் என்று நாதன் அங்கு நின்ற கூட்டத்தினருக்கு கூறினார். 10 நிமிடத்தில் இரு கார்களும் யாழ்ப்பாணம் சென்றன.

சட்: இதெல்லாம் நடந்தது ஊரடங்கு சட்ட நேரத்திலா? ஆம்.

சட்: நீர் இதுபற்றி பொலிஸாருக்கு சொன்னீர்?- ஆம் நாதனை எச்சரிப்பதாக சொன்னார்கள்.

சட்: யாருக்கு சொன்னீர்?- ஏ. எஸ். பி. தலைமைக்காரி இன்ஸ்பெக்டர் சில்வாவுக்கு

கமிஷனர்: இருவரும் இருந்தனரா?-ஆம்.

சட்: அன்று சடலத்தை பார்த்தவர்களில் நீர் ஒருவர் தான் தமிழரல்லாதவர்கள்? வேறு இரண்டு சிங்கள இளைஞர் வந்துபார்த்தனர். மற்ற 100 பேரும் தமிழர்கள்.

இங்கு சாட்சியமளிக்க பொலிசார் தூண்டினரா

சட்: இங்கு சாட்சியமளிக்குமாறு பொலிசார்தான் உம்மை தூண்டினார்கள்? இல்லை.

சட்: கமிஷன் முன்சாட்சியமளிக்கவேண்டும் என எப்போது தீர்மானித்தீர்? யாழ்ப்பாணத்தில் விசாரணை நடந்தபோது,நானும்சாட்சியமளிக்க வேண்டும் என விரும்பினேன்.

சட்: விருதாசலம் சாராயம் கடத்திய வழக்கு எங்கு நடந்தது? வவனியா கோர்ட்டில் இல. 11091.

சட்: எப்ப நடந்தது? 77-ம் ஆண்டு

சட்: நீர் ஏன்வழக்கு நம்பரை தேடி எடுத்தீர்? விருதாசலம், புங்குதீவில் குண்டுகள் தயாரிப்பதாகவும் அதற்காக பெற்றோல் கடத்துவதாகவும் அறிந்தேன். வழக்கு இலக்கம் நான் கோட்டுக்கு போனபோது எடுத்தேன்.

சட்: உமக்கு சாராய வழக்கு பற்றி ஒரு அக்கறையும் இல்லையே? இவர்கள் சட்ட விரோதச் செயல்கள் செய்வதால் நம்பரைப் பதிந்தேன்.

சட்: சில பொலிஸ்காரர் இந்த வழக்கு நம்பர்களை உமக்குத் தந்தனர்? இல்லை.

சட்: கடையில் கண்டுபிடித்த குண்டுகளுக்கு என்ன நடந்தது? செப்டம்பர் 14ல் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. வழக்குத் தாக்கலாகவில்லை.

சட்: விருதாசலம் எங்கே? வேறு கடை நடத்துகிறார்.

சட்: நீதவான் அறையைச் சோதனையிட ஏன் வந்தார்? விருதாசலம் ஆபத்தான பேர்வழி, குண்டும் வைத்திருப்பார் என நீதவானுக்குச் சொன்னேன் அதனால் சோதனையிட்டார்.

கமிஷனர்: நீதவான் ஏன் வந்தார்? வெடிமருந்து, பெற்றோல் குண்டு இருப்பதாகவும், பயமாக இருப்பதாகவும் நீதவானிடம் கூறினேன்.

கமிஷனர்: நீதவான் நேரில் வந்து பார்வையிட்டாரா? ஆம்.

(5ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

வெற்றி எம்மைத்தேடி வரப்போவதில்லை. நாம் தான் அதை நோக்கி கால் எடுத்து நடக்க வேண்டும்.

—கலைஞர் மு. கருணாநிதி

மொரார்ஜி தேசாய்

பிரி. அமெரிக்கா செல்கிறார்

புதுடில்லி, ஏப்.27

இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் செல்கிறார்.

பிரிட்டிஷ் பிரதமர் ஜேம்ஸ் கலகனின் அழைப்பை ஏற்று ஜூன் மாதம் 6-ம் திகதி முதல் 8-ம் திகதிவரை திரு. தேசாய் பிரிட்டனில் விஜயம் மேற்கொள்வார் என்று அறிவிக்கப்பட்டது.

வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாயும் பலஉயர் அதிகாரிகளுடனும் திரு. தேசாயுடனும் பிரிட்டன்சென்று அங்கு உத்தியோகபூர்வ பேச்சுக்களை நடத்துவர்.

எலிஸபெத் மகாராணி பிரிட்டிஷ் எதிர்க்கட்சித்தலைவர் திருமதி மார்க்கிரெட்தட்சர் ஆகியோருடனும் திரு. தேசாய் பேச்சு நடத்துவர்.

சென்ற 9-ம் திகதி படைகுறைப்பு குறித்து ஐ. நா. பொதுச்சபையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்து கொள்ளும் திரு. தேசாய் பின்னர் 14-ம் திகதி அமெரிக்காவில் விஜயம் ஒன்றினை மேற்கொள்வார். (இ)

இமயமலைச்சிகரத்திலுள்ள அமெரிக்க உளவு கருவி!

யு. எஸ். பத்திரிகையாளர் கருத்து

நியூயார்க், ஏப். 21

சீன-இந்திய எல்லைக்கு அருகில் இமாலயமலைச் சிகரத்தில் சீனாவின் அணு குண்டுப் பரிசோதனைகள் பற்றிய தகவல்களை அறியவென இரகசியமாக அமெரிக்கா பொருத்திய உளவுக் கருவிபற்றி பிரபல அமெரிக்கப் பத்திரிகையாளரும் 'ரோலிங் ஸ்ரோன்' பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவருமான ஹவார்ட் கோஹன் இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் பல திடுக்கிடும் தகவல்களை வெளியிட்டார்.

இமயமலைச் சிகரத்தில் இந்த இரகசிய உளவுக் கருவியைப் பொருத்துவதற்காக 1964 ல் அமெரிக்க உளவு ஸ்தாபனமாகிய சி.ஐ.ஏ. மலையேறுபவர்கள் கோஷ்டியொன்றினைத் திரட்டியதாம். முதலில், வடக்கு கரோலினாவிலுள்ள ஹார்வே முனையிலுள்ள சி. ஐ. ஏ. யின் இரகசியத் தளத்திலும் பின்னர், அலாஸ்காவிலுள்ள மிகின்லீ மலைப் பிரதேசத்தில் இந்த கோஷ்டியினருக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டதாம்.

1965ம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்த மலையேறும் உளவுக்கோஷ்டி வட இந்தியாவிலுள்ள நந்தாதேவி மலைச் சிகரத்தின் அடிவாரத்துக்கு வந்துசேர்ந்தது. இச் சிகரத்தில் தான் 'ருடோரியம் 238 ஐஸோடோப்'புகளைக் கொண்ட அணுசக்தியில் இயங்கும் உளவுக் கருவியைப் பொருத்துவது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், காலநிலை சீராக இல்லாமலிருந்த காரணத்தினால் நந்தாதேவி சிகரத்துக்குச் செல்லும் முயற்சியில் இவர்கள் தோல்வி கண்டனர். தாம் கொண்டு வந்த அணு உளவுக் கருவியை பாறைகள் மத்தியில் மறைத்து வைத்துவிட்டு மீண்டும் இக் கோஷ்டி அமெரிக்காவுக்குத் திரும்பிச் சென்றதாம்.

1966 ஏப்ரலில், இந்த உளவுக் கோஷ்டி மீண்டும் இந்த இடத்துக்கு வந்தபோது, இந்த அபாயகரமான அணு உளவுக் கருவி காணாமல்போய்விட்டிருந்ததாம். பனிப்புயலால் எங்கோ அடித்துச் செல்லப் பட்டிருந்த இந்தக் கருவியைக் கண்டுபிடிக்க இவர்கள் மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வி கண்டன. இவ் விஷயத்தில் மேலும் ஈடுபடுவது சர்வதேச ரீதியில் ஒரு அவதூறினைக் கிளப்பிவிடும் என அஞ்சிய சி. ஐ. ஏ. அதிகாரிகள் இந்த விஷயத்தை மறந்துவிட தீர்மானித்தனராம்.

இந்திய அரசுக்கு இவர்கள் இதுபற்றி எதுவித தகவலையும் கொடுக்கவில்லை.

1977ல் மீண்டும் இந்த உளவுக் கோஷ்டியினர் இமாலயத்தின் பிறிதொரு சிகரத்துக்கு வந்து இன்னுமொரு அணு உளவுக் கருவியைப் பொருத்தினர்.

''இந்த உளவுக்கருவி பொருத்தப்பட்ட இடம் மிகவும் அபாயகரமானது ஏனெனில் இந்த இடத்திலிருந்து இந்தியாவின் மிகப்பெரிய நதியாகிய கங்கை நதி உற்பவிக்கின்றது. 'புளோனியம்-238' ஐக் கொண்டிருந்த இந்த உளவுக்கருவி 300-500 ஆண்டு காலத்துக்கு மிகவும் அபாயகரமான நச்சுக் கதிர்களை வீசுகிறது. கங்கை நதி நீருடன் இந்த நச்சுக்கதிர்கள் கலக்கின்ற பட்சத்தில் அது பல பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும்' என ஹவார்ட் கோஹன் கூறினார். (இ)

மத்திய கிழக்கு அமைதிப்பேச்சு:

அமெரிக்க இஸ்ரேல் முரண்பாடுகளை பெகின் நீக்க வேண்டும்

கார்ட்டர் அறிவிப்பு

வாஷிங்டன், ஏப். 27

அமெரிக்க-இஸ்ரேல் மத்தியகிழக்கு சமாதான பேச்சுவார்த்தைகளில் கடந்த மாதம் ஏற்பட்ட முட்டுக்கட்டைகளைப் போக்குவது இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகினுடைய பொறுப்பாகும் என்று அமெரிக்க அதிபர் திரு ஜிம்மி கார்ட்டர், வெளிநாட்டமைச்சர் திரு. வான்ஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் இஸ்ரேல்-அமெரிக்க சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னோடியாக இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் ஜெனரல் மோஷே தயான் அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு வான்ஸை வாஷிங்டனில் சந்தித்து உரையாடினார். (இ)

மண்ணுள் ஊடுருவும் 'ராக்கட்'

மாஸ்கோ, ஏப். 27

மண்ணுள் ஊடுருவிப் பாய்ந்து அகழவல்ல புதிய ''ராக்கட்'' ஒன்றினை சோவியத் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இருபது விநாடிகளிலுள்ள ஒரு மீட்டர் விட்டமுள்ளதும் 20 மீட்டர் ஆழமானதுமான ஒரு கணவாயை இந்த ராக்கட்டினால் அகழ்ந்துவிட முடியும். இதுதற்போது உபயோகத்திலுள்ள அகழ்வு எந்திரங்களைக்காட்டிலும் செயல்வலுகூடியது.

எண்ணெய் எரிவாயு வளங்களைத் துரிதமாகக் கண்டுபிடிக்கவும், மலைகளுடாக கணவாய்களை வெட்டுவதற்கும் இந்த புதிய 'ராக்கட்' பெரிதும் துணை செய்யும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இந்த 'ராக்கட்'டின் இன்னுமொரு சிறப்பியல்பு என்னவெனில், குறிப்பிட்ட ஆழத்தில் அகழ்வு வேலை முடிந்ததும் தானாகவே பூமியின் மேற்பரப்புக்கு வந்துவிடுகிறது! [இ]

''இப்பொழுதே சமாதானம்''

டெல்அவிவ் ஏப். 27

மத்தியகிழக்கில் உடன் சமாதானம் ஏற்படவேண்டும் என்று விரும்பும் இஸ்ரேலிய மக்கள் ஒரு குழுவினராகச் சேர்ந்து 'இப்பொழுதே சமாதானம்' என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர்.

இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் மத்தியகிழக்கு பிரச்னை தொடர்பாக விதித்திருக்கும் நிபந்தனைகளில் சிலவற்றை விட்டுக்கொடுக்க வேண்டும் என்று கோரிய இந்த இயக்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். (இ)

தமிழினம் விடுதலைபெற...

(நீர்வேலி)

''தமிழ்பேசும் மக்கள் எல்லாரும் இன, மத, ஜாதி வேறுபாடுகளைக் களைந்து ஒன்றுபட்டாலே தமிழினம் விடுதலை பெறமுடியும்'' என்று யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் நீர்வேலி தெற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

ப. நோ. கூ. சங்கங்களுக்கு

சுழல் கடன்

(உடுப்பிட்டி)

சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் ஒருமாத 'சுழல் கடன் வசதி'யைக்கொடுத்துதவுமாறு உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் உணவு ஆணையாளர் திணைக்களத்தைப் பணித்துள்ளார்.

தற்போது சங்கங்களை எதிர்நோக்கும் நிதி நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கும் பாவனையாளருக்கும் பங்கீட்டுப் பொருட்களைத் தடையின்றி வழங்குவதற்குமே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கூட்டுறவுச் சங்கங்கள் தமது வியாபாரத்தைப் பெருக்கும் பொருட்டு 5 கோடி ரூபாய் மத்திய நிதியிலிருந்து பெறக்கூடிய வழி வகுக்கப்பட்டுள்ளது.

கூப்பன் புத்தகங்கள் மீள் செல்லுபடித்திட்டத்தின் கீழ் பல கூட்டுறவுச் சங்க ஊழியருக்கு போதிய வேலை இல்லாத போதிலும் ஒரு ஊழியனைத் தானும் வேலையிலிருந்து நீக்கக் கூடாதுஎனவும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

''ஞானபீட'' விருது

புதுடில்லி, ஏப். 27

வங்காள எழுத்தாளர் திருமதி ஆஷா பூர்ணதேவிக்கு 76ம் ஆண்டு சிறந்த கதாசிரியருக்கான 'ஞானபீட' விருது வழங்கப்பட்டுள்ளது. (இ)

''முழங்காவிலே

பொன்விளையும் பூமியாக்க இளைஞர் உழைப்புத்தேவை''

— யாழ். அரசாங்க அதிபர்

(முழங்காவில்)

'இலங்கையில் உள்ள இளைஞர் விவசாயத்திட்டங்களில், முழங்காவில் குழாய்க்கிணற்றுத்திட்டம் சிறப்பாகவும், முன்னேற்றமாகவும் இயங்கும் என்ற நம்பிக்கை எமக்கு ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தை திறம்பட இயக்கி நல்லபயன் பெறச்செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ள இதேவேளையில் இத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் இதில் காட்டும் ஆர்வமும், முன்மாதிரியும் இத்திட்டத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் எடுத்துக்காட்டாக இருக்கின்றது'.

இவ்வாறு முழங்காவில் அரசினர் வித்தியாலய மண்டபத்தில் முழங்காவில் இளைஞர் திட்டம் சம்பந்தமாக நடந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கிய யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசேப் தமது உரையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், 'இத்திட்டத்தால் இருநூற்றுக்குமதிகமான இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறுவதுடன் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு பொருளாதார சுபிட்சமும் ஏற்படுகிறது. இத்திட்டத்தில் உள்ள இளைஞர்கள் இக்கிராமத்தையே ஒரு வளம்கொழிக்கும் பூமியாக்கி மேன்மேலும் முன்னேற்றங்கள் காணபாடுபடுவார்கள் என நம்புகிறேன் என்றார்.

எம் பி. பேச்சு

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில் 'வடபகுதியின் பல தொகுதிகளிலுமிருந்து கிளிநொச்சித் தொகுதிக்கு வந்துசேரும் இளைஞர்களை இங்கு வரவேற்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இத்திட்டம் சிறப்பாக இயங்கவும் வெற்றிபெறவும் எமது பொருளாதார வளம் பெருகவும் இளைஞர்களாகிய உங்களது முயற்சியே தேவைப்படுகிறது. இதற்கான உதவிகளை செய்வதற்கு நான் என்றும் தயாராக இருப்பேன்' என்றார்.

இத்திட்டத்தில் உள்ள இளைஞர்களுக்கு கடன் வழங்கும் முறைகள் பற்றியும், கடன்கள் பெறும் ஆலோசனைகள் பற்றியும் வங்கிமுகாமையாளர்கள் தமது உரையின்போது தெரிவித்தனர்.

மாவட்டக்காணி உத்தியோகத்தர் திரு. எம். குலநாயகம் பேசுகையில், முந்திய காலங்களில் இப்பகுதியை இளைஞர்கள் திரும்பிப்பார்ப்பதுகூட இல்லை. இன்று இது ஒரு இளைஞர்கள் கிராமமாக மாறிவிட்டது. இதற்கு உதவிசெய்ய முன்வந்த அரசாங்கத்தையும் ஆணையாளர்களையும் நாம் பாராட்டவேண்டும். நல்ல உணவு உற்பத்தியை, பலதரப்பட்ட உபஉணவுப் பயிர்களை இத்திட்டத்தின் மூலம் நாம் காணவேண்டும் என்றார்.

இருநூற்றுக்குமதிகமான இளைஞர்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், மாவட்ட காணி உத்தியோகத்தர்கள், திரு. எம் குலநாயகம், திரு. எஸ். கணேசநாதன், இலங்கை வங்கி பிரதேச முகாமையாளர், மக்கள் வங்கி முகாமையாளர் உட்பட அரசாங்க திணைக்கள அதிகாரிகள் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

கூட்ட ஆரம்பத்தில் முழங்காவில் பிள்ளையார் கோவில் வீதியில் அதிகாரிகளால் தென்னைமரங்கள் நாட்டப்பட்டன. முழங்காவில் இளைஞர் விவசாயத் திட்டத்தின் ஞாபகார்த்தமாக இந்தமரங்கள் நாட்டப்பட்டன. தற்பொழுது இத்திட்டத்தில் வெட்டப்பட்டுள்ள எட்டுக் குழாய்க்கிணறுகளுக்குரிய காணிகளிலும் வேலைகளை ஆரம்பிப்பதற்காக, இதற்கான காணிகளை இத்திட்ட இளைஞர் குழுக்களின் தலைவர்களுக்கு காணி மேற்பார்வையாளரால் காண்பிக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து மேற்படி கூட்டம் நடைபெற்றது.

(வண். திரு. உ.)

நல்லாசான் செல்லையா உபாத்தியாயர்

மெலிந்த உருவம் உயர்ந்த பண்பு. ஆழ்ந்தகாருண்யமான பார்வை தெளிந்த இனிமை பயக்கும் மொழி உதவியற்றவர்களுக்கு உதவவேண்டுமென்ற உணர்வு இவையாவும் நிறைந்தவர் தான் செல்லையா உபாத்தியார்.

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம் செல்லையா உபாத்தியாயர் பயிற்றப்பட்ட ஆசிரியராக நுமேனியா, இரத்தினபுரி, விசுவ ரெட்டியா புத்தூர், பளை, முள்ளியவளை, பிலவத்தை ஆகிய இடங்களில் முப்பத்தைந்து வருடங்களாகப் பணியாற்றிப் பல்வேறு உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெற்று ஆசிரியத் தொழிலின் புனிதத்தன்மையைப் பாதுகாத்த ஆசிரியர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இவரிடத்தே காணப்பட்ட மொழிப்பற்றும் சமயப்பற்றும் பிறர்வியந்து பாராட்டுமளவிற்கு மிகுந்து காணப்பட்டது.

தமிழ்ப்பண்பாடு கலாச்சாரம்வளர வேண்டுமென்பதில் மிகுந்த ஆர்வமுடையவராய் இருந்தது மட்டுமன்றி தமிழ்ப்பண்பாடு கலாச்சாரத்தை மறந்து தற்கால நாகரிகத்தில் மூழ்கிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தமிழ்ப்பண்பாட்டைப் போதித்து நல்வழிப்படுத்துவார். தாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார் என்னும் பொய்யாமொழிக்கிணங்க பிறர் நலமே தம் நலம் எனக் கொண்டு வாழ்ந்த இவர் காரைநகரில் உள்ள மணிவாசகர் சபை ஈழத்துச்சிதம்பரம் அன்னதான சபை சைவமகாசபை ஈழத்துச்சிதம்பர திருப்பணிச் சபை போன்ற சமூக சமய மன்றங்களில் பொறுப்பு மிக்க பதவிகளில் இருந்து தமது சீரிய சேவையை ஆற்றி வந்துள்ளார். காந்தியக் கொள்கைகளில் பற்றுக் கொண்டு எளிய ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்ந்து ஏனையோருக்கும் ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்த செல்லையாஉபாத்தியாயர் 20-3-78 இல் தமது 67 வது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவனடி சேர்ந்தார்.

—க. சிவகுமாரன்

புதிய ஏ. ஜி. ஏ. நியமனம்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபராக திரு முருகேசு தம்பிமுத்து நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கிளிநொச்சிப் பகுதி மாவட்ட காணி அதிகாரியாகவும், பருத்தித்துறை துணுக்காய் ஆகிய இடங்களில் காரியாதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-30
விஜயகுமாரி
நடித்த
தாயில்லாக்குழந்தை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30,
வாடைக்காற்று

சாந்தி (யாழ்; நகர்) போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
3-வது வாரம்
இன்னும் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.
சிவாஜி நடிக்கும் கந்தன்கருணை ஈஸ்ட்மன் கலர்
விசேட படக்காட்சி 29-ம் 30-ம் திகதி
சனி, ஞாயிறு காலை 8-30 மணிக்கு மட்டும்
SADKO

Regal (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m.
TONY CURTIS ROGER MOORE in
SPORTING CHANCE
(Color) (Spy Film)

Rio (Jaffna) (Phone; 7607) Now showing
Man in the Iron Mask
New Release (Color)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ்
நடித்த
நல்லநேரம்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

4-வது வெற்றி வாரம்
ராணி
(யாழ்; நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

4வது ஜனத்திரள் கடைசி வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
இதுவரை யாழ். நகரில் திரையிடப்பட்ட பழைய படங்களின் வசூலை முறியடித்து சாதனை புரிகிறது
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா
நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

வெலிங்டன் (யாழ்: நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692
(யாழ். நகர்)
இன்று முதல்
ஆண்டவன் கட்டளை

"ஜாதி ஒழிப்பு பேச்சளவில் இருந்தால் போதுமா?"

— அ. இ. தி. மகாசபைத் தலைவர்

(அரியாலை)

"எம் நாட்டில் இன்று காணப்படும் தீண்டாமையும், சமூக ஏற்றத் தாழ்வுகளையும் முற்றாக ஒழித்து சமூகங்களிடையே ஐக்கியத்தையும், பரஸ்பரத்தையும் ஏற்படுத்த நமது தேசிய பேரவை உறுப்பினர்கள் முன்னின்று உழைக்க வேண்டும். சாதி பேதம் பாராட்டுவதும், சமூகங்களிடையே ஏற்றத்தாழ்வுகள் பார்ப்பதும் சாபக் கேடானது என்று எல்லோரும் மேடைக்கு மேடை வீரமுழக்கம் செய்கிறார்கள். இவைகளெல்லாம் பேச்சளவில்தான் அமைகிறதே தவிர செயலளவில் எதையும் காணமுடியவில்லை."

இவ்வாறு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைத் தலைவரும், கோண்டாவில் ஸ்ரீ நாராயண கிராம முன்னேற்ற சங்க உபதலைவருமான திரு. க. கிருஷ்ணராசா கோண்டாவில் ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்திச் சங்க சன சமூக நிலைய 26 வது ஆண்டு விழா விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

சனசமூக நிலையத் தலைவர் திரு இ இராஜரத்தினம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் திரு. க. கிருஷ்ணராசா தொடர்ந்து பேசுகையில் வடக்கு மாகாணத்திலுள்ள எத்தனையோ கிராமங்களிலுள்ள சைவ ஆலயங்களில் வழிபடவும், பொதுக் கிணறுகளில் நீர் அள்ளிப் பருகவும் இருபாலை மக்களுக்கு தடைகள் உண்டென்பதை யாரும் மறுக்க முடியாது 'தமிழ் மக்கள் தமக்குப்பூரண சுதந்திரமுள்ள தனிநாடு அமைக்கக் கிளர்ச்சி செய்யும் இந்த நேரத்தில் சிறுபான்மைத் தமிழரையும் மனி

(6-ம் பக்கம் பார்க்க)

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டைச்சேர்ந்த சங்கரப்பிள்ளை விசுவலிங்கம் கைம்பெண் திலகவதியின் மரணசாதனம் சம்பந்தமான விடயத்தில்

காலஞ்சென்றவர்

இராமலிங்கம் சரவணமுத்து செம்மணிரோட்டு, நாயன்மார்கட்டு.

மனுதார்

மரண சாதன நியாயாதிக்கம் | இல: 3345

1. கனகசூரியர் கைம்பெண் பத்மாவதி
2. மயில்வாகனம் மகேஸ்வரனும் பெண்
3. நாகபூசணியம்மாவும் செம்மணி ரோட் நாயன்மார்கட்டு
4. மயில்வாகனம் நடராசா 33, ஐயனார் வீதி
5. செல்லையா நாகராஜேஸ்வரி
6. செல்லையா மகள் நகுலேஸ்வரி
7. செல்லையாமகள் புஸ்பவதி
8. சங்கரப்பிள்ளை செல்லையா எல்லாரும் புன்னாலைக்கட்டுவன் தெற்கு. சுன்னாகம்

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஆனி மாதம் [14-6-78] 14ம்திகதி முற்பகல் 10 00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றனர். 1978ம் ஆண்டு சித்திரைமாதம் 25ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஒப்பம்
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

வரைதல்:
கந்தையா சற்குணநாதன்
"மலரகம்"
வேலணை கிழக்கு.
மனுதாரின் சட்டத்தரணி.

9153

இன்று மட்டும்
வெல்லி
([illegible])
தினசரி,
6-30, 9-30
ஜெய்சங்கர்
நீதிதேவன்

கூட்டணியினரின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சட். பாலா: அப்படி நடப்பதில்லையென்பதை கூறுகிறேன்? அவர் வந்தார்.

சட். தென்னகோன்: பெற்றோல் குண்டு வழக்கு பற்றி நாளை பொலிசார்மூலம் அறியலாம்.

சட். சிற்றம்பலம்: நீர் உளுக்குளம் கிராமசபைத் தலைவராக இருந்தீர்? ஆம்.

சட். சிற்றம்பலம்: எத்தனை வருடம்? 9 வருடம்.

சட்: கலவரத்தில் வவுனியாவில் எந்த சிங்களக் கடையும் தாக்கப்படவில்லை? எனது கருஜூம், கடை ஒன்றும் எரிந்தது.

சட்: உமது கருஜூக்கு ஒன்றும் நடக்கவில்லை! என் கருஜூக்கு தகரம் அடித்திருக்கிறேன், அது எரியாது.

சட்: தமிழ்க் கடைகள் பல எரிந்தன? என் கருஜூக்கு அருகில் உள்ள கடையும் எரிந்தது.

சட்: எம். பி சிவசிதம்பரம் ஜீப், டீசலில் ஓடுவதனால், அவரிடம் பெற்றோல் இருந்திராது? எனக்குத் தெரியும், அவரின் ஜீப் பெற்றோலில்தான் ஓடுவது, என் கருஜூக்கு வருவதுண்டு. [ச-இ]

பதவி வெற்றிடம்

கீழ்வரும் பதவிகளுக்கு சங்கத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. பசையிடும் உதவியாளர் தரம் 1
2. கொள்வனவு உத்தியோகத்தர் தரம் 2
3. கணக்கு லிகிதர் தரம் 2
4. பொதுலிகிதர் தரம் 2
5. கிளை முகாமையாளர் தரம் 2
6. கணக்கு லிகிதர் தரம் 3
7. இட்டை லிகிதர் தரம் 3 பகுதி ஆ
8. காரியாலய சேவகர் தரம் 4
9. தொழில் பயிலுநர்

விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்திலேயே நிரப்பப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது அதே மாதிரியாகத் தயாரித்தும் அனுப்பலாம். விண்ணப்பப் படிவத்தையும் மற்றும் விபரங்களையும் ரூபா ஒன்று செலுத்தி சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம் தபால்மூலம் பெற விரும்புவோர் போதிய முத்திரையொட்டப்பட்ட 4'' அளவுள்ள சொந்த முகவரியிட்ட தபால் உறையுடன் ரூபா ஒன்றுக்கான தபால் கட்டளையையும் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய கடைசித் திகதி 18-5-1978.

தலைவர்

யாழ். மாவட்ட
புடவை நெசவாளர்
கூட்டுறவுச்சங்கம்,
10/1, மணிக்கூட்டுவீதி,
யாழ்ப்பாணம்.

9150

யாழ்ப்பாண மாநகரசபை

கேள்வி அறிவித்தலும் கேள்வி நிபந்தனையும்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 10-5-78ம் திகதி நண்பகல் 12-00 மணி வரை யாழ்ப்பாண மாநகர ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

[அ] யாழ்ப்பாண மாநகர விளையாட்டரங்கு மதில் சுவர்.
[ஆ] யாழ்ப்பாண மாநகர கொங்கிறீற் யாட் மதில் சுவர்.
[இ] யாழ்ப்பாண மாநகர பொதுசன நூலக-திறந்தவெளி அரங்கு மதில் சுவர்.
[ஈ] யாழ்ப்பாண மாநகர முற்றவெளியில் பஸ் நிலையம்.
[உ] யாழ்ப்பாண மாநகர முனீஸ்வரன் வீதி.

2. ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப் பணமாக ரூபா நூறும் (ரூ. 100/-) மீளளிக்கப்பட முடியாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா இருபத்தைந்தும் (ரூ. 25/-) செலுத்தியதன் பேரில் 9 5-7,8 நண்பகல் 2-00 மணி வரை யாழ்ப்பாண மாநகர மராமத்துப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்கள் மீதே கேள்விகள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தேவையான உடன்படிக்கைகளில் சித்தி பெற்ற கேள்விக்காரர் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப்பணமான ரூபா 100 மீளளிக்கப்படும்.

3. பதிவு செய்யப்பட்டிருப்பதற்குச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், மாநகரசபையிடம் அல்லது பொது வேலைத் திணைக்களத்திடம் ரூபா ஐம்பதாயிரத்திற்கு (ரூ. 50,000/-) குறையாத தொகைக்குப் பதிவுசெய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தக்காரருக்கு மட்டுமே கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

4. மேற்கொண்டு தேவைப்படும் விபரங்கள், நிபந்தனைகள் மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடம் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்
மாநகர. ஆணையாளர்.

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
25-4-78.

9145

''தமிழீழக்கோரிக்கைமறுபரிசீலனையா? அப்பேச்சுக்கே இடமில்லை''

செல்வா நினைவுவிழாவில் 'அமிர்'

[யாழ்ப்பாணம்]

''ஒற்றுமை என்னும் கப்பலேறி 'தமிழ் ஈழம்' என்னும் துறைமுகத்தை அடைவதுதான் தமிழர்களாகிய நாம் செந்தமிழர் செல்வாவுக்கு அளிக்கும் அளப்பரிய அஞ்சலியாகும்''

இவ்வாறு நேற்று முன்தினம் நல்லூர் சந்தை மைதானத்தில் கி. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற தந்தை செல்வா முதலாண்டு நினைவாஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார். அவர் தொடர்ந்து தமதுரையில் கூறியதாவது:-

''மறைந்த நம் தலைவர் தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தக்கூடிய மிகப் பொருத்தமான இடம் இந்த இடம்தான் என்பதைச் சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகின்றேன்.

சங்கிலியன் மண்ணில்

''வீரம் நிறைந்த தமிழ் மன்னன் சங்கிலியன் ஆண்ட இந்த மண்ணிலே, தமிழர் விடுதலைப் போராட்டங்களில் பங்குகொண்டு தமிழ இளைஞர்கள் பலர் சிறை சென்றதன் மூலம் வீரம் நிறைந்த வாலிபர்களைக் கொண்ட இந்த இடத்திலே இத்தகையதொரு விழா நடப்பது மிகப் பொருத்தமுடையதே.

சிங்களவருடன் ஒத்துப்போக விரும்பினர்

தந்தை செல்வா ஆரம்பகாலத்தில் சிங்களவர்களோடு ஒன்றுபட்டு ஒத்துப்போக விரும்பினார். 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் இரு தேசிய இனங்களின் ஐக்கியத்திற்கு சமஷ்டி ஆட்சி வேண்டும் என்றார். அரசு செவிசாய்க்கவில்லை.

சமஷ்டிக்குக் குறைவான மாவட்ட சுயாட்சியாவது தாருங்கள் என்றார். அதுவும் கிடைக்காதபட்சத்தில், ஆறு அம்சத் திட்டத்தை முன் வைத்த நிலையில், அரசினால் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில், தமிழ் உயிர்களுக்கு விலைமதிப்பற்ற நிலையில் வீதிகளிலே தமிழர்கள் நாய்போல் சுட்டுக்கொல்லப்படுகின்றநிலையில்தான் தந்தையவர்கள் எங்களுக்கு விட்டுச்சென்ற ஒற்றுமை என்ற கப்பல் காத்து நிற்கின்றது.

தந்தையவர்கள் விரும்பிய அந்தச் சுதந்திர தமிழ் ஈழம் என்ற துறையை நாம் சென்றடைவதுதான் நாம் அவருக்கு ஆற்றுகின்ற அளப்பரிய தொண்டாகும்.

அவர்கள் கண்ட கனவு

இந்த நாட்டிலே பொதுத் தேர்தல் நடந்தபொழுது தென்னிலங்கைவாழ் அரசியல் தலைவர்களும், த. வி. கூட்டணிக்கு விரோதமான சக்திகளும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பு சிதறி சின்னாபின்னப்பட்டுவிடும் எனக் கனவு கண்டார்கள். ஆனால் அதற்கு மாறாக அந்தத்தேர்தலிலே என்றுமில்லாதவாறு அத்தனை தமிழ் எம். பிக்களும் அமோகமான வெற்றிபெற்று தந்தையின் கனவை நனவாக்கியே தீருவோம் என உலகறியச் செய்தனர்.

"இதயம் பேசுகிறது" ஆசிரியர்

இன்றும் சிலர் மக்கள் மத்தியில் தவறான கருத்துக்களைப் பரப்பி குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொள்கிறார்கள். அண்மையில் இந்தியாவிலிருந்து இங்கு வந்திருந்த "இதயம் பேசுகிறது" ஆசிரியர் திரு. மணியன் என்னை மூன்றுமணி நேரம் பேட்டிகண்டார். தனது உதவியாளர் மூலம் சுருக்கெழுத்தில் பதிவுக் கருவியிலும் எனது பேட்டியைப் பதிவு செய்துகொண்டு சென்றார். ஆனால் பின் அவர் தனது புத்தகத்தில் எழுதியிருப்பதைப் பார்த்தபோது எனக்கு வியப்பாக இருந்தது.

அரசுக்கு நோகாமல் அடிப்படை உரிமைகள் கிடைத்தால் நாம் எமது முடிவுபற்றி மறுபரிசீலனை செய்வோம் என நான் கூறியதாக எழுதியுள்ளார். இது மிகத் தவறு நாம் எந்தச்சந்தர்ப்பத்திலும் தமிழ் ஈழம் என்ற கோரிக்கையைக் கைவிடமாட்டோம்.

மக்கள்முன் நாம் எடுத்துக்கொண்ட இலட்சியத்தை, தமிழ் ஈழக் கோரிக்கையை வென்றெடுக்காமல் விடமாட்டோம் என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவைக்க ஆசைப்படுகின்றேன். ஒன்றுபட்ட ஒற்றுமையின்கீழ் தமிழ் ஈழத்தை அடைந்தே தீருவோம்.

சிலரின் கேள்வி

சிலர் எங்களைப் பார்த்து ஏன் உடனடியாகப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை என கேட்கிறார்கள். போராட்டங்கள் பல கோணங்களிலே நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றது; நாம் நாளும் பொழுதும் வெளிநாட்டுத் தூதுவர்கள், வெளிநாட்டமைச்சர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆகியோரிடம் தமிழ் ஈழம்தான் எமது இலட்சியம் என்பதை எடுத்துச் சொல்லிக்கொண்டிருப்பதும் எமது போராட்டத்திலொரு அம்சமாகும்.

காலம் வரும்போது ...

எமது மக்களை நாம் பாதுகாக்கவேண்டியவர்கள், இனக் கலவரத்தின்போது தமிழ்மக்கள் தங்கள் சொந்தமண்ணிலேயே தாக்கப்பட்டார்கள். இந்த அவலநிலையைப் போக்க எமது இலட்சியமான தமிழ் ஈழப் போராட்டத்தை உலகறியச்செய்யவேண்டும். இந்த இயக்கத்தைக் கட்டுக்கோப்பான இயக்கமாக இயக்க வேண்டும், காலம் வரும்போது நாம் களத்தில் குதிப்பதற்குத் தயாராகவேண்டும்.

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுக் களைப்படைந்துள்ள மக்களைக் களத்தில் விடுவது புத்திசாலித்தனமானதல்ல. காலம் வரும்போது களத்தில் குதித்துத் தந்தை கண்ட தமிழ் ஈழத்தைப் பெற்றேதீருவோம். அதுவரை நாம் ஏமாறமாட்டோம் இறுதி உறுதி'' என்றார்.

மங்கையர்க்கரசி பேச்சு

அடுத்துப்பேசிய திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ''தெய்வம் நமக்குத் தந்த தெய்வம் தந்தை செல்வா அந்த தெய்வம் தமிழினத்தின் பாதுகாவலராக இருந்தார். அவர் முன்னே சென்றால் எந்த இடத்திலும் பயமின்றி அவர் பின்னே செல்லும் தொண்டர்களாக நாம் இருந்தோம். அந்த தெய்வம் காட்டிய வழியில் சென்று அவர் இலட்சியத்தை ஈடேற்றுகின்றவரை நாம் ஓயமாட்டோம்.

ஆலால் உரை

திரு. மூ. ஆலாலசுந்தரம் பேசுகையில் தந்தையவர்கள் தலைமையை இந்த நாட்டில் வாழ்கின்ற அத்தனை தமிழ் பேசும் மக்களும் ஏற்றுத்தான் இருந்தார்கள். அவரது இலட்சியப் பயணத்தில் இந்தக் கிராமத்து மக்கள் பெருவாரியாக அவரைப் பின்தொடர்ந்து பணியாற்றினார்கள்.

தந்தை செல்வா ஒரு தீர்க்கதரிசி தமிழினத்திற்கு ஏற்படவிருக்கின்ற இன்னல்களை முன்னமே எடுத்துக்கூறி அதற்கான வழிவகைகளை மேற்கொண்டு வந்தார். தந்தை அவர்கள் விட்டுச்சென்ற மகத்தான பணியினை நாம் நிறைவேற்றியே தீருவோம். தந்தை செல்வா அரசியல் அரங்கிலே உண்மைக்கும், அன்பிற்கும் உதாரணமாகத் திகழ்ந்தார் அவர் விட்டுச் சென்ற அன்பு வழி நின்று அவரது இலட்சியத்தை ஈடேற்றுவோம்.

யாழ். எம். பி.

யாழ்ப்பாணத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் தனது உரையில் ''தமிழ் மக்கள் மத்தியில் தந்தை செல்வா பெற்ற இடத்தை வேறெந்தத் தலைவர்களும் இதுவரை பெற்றிருக்கவில்லை. தந்தை செல்வாவை தமிழ் மக்கள் மட்டுமல்ல மாற்றுக் கட்சித் தலைவரும் மதித்து நடத்திருந்தார்கள். அவர் உண்மையின் திருவுருவாய் விளங்கினார் என்றார். (கா)

ஜாதி—

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

தராக மதித்து நடத்தவேண்டும்

கல்வி, பொருளாதாரம் என்பவற்றில் பின்தங்கிய நிலையில் வாழும் எம்மக்களுக்கு தொகுதிக்கு ஆயிரம் பேருக்கு வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் கணிசமான தொகையை ஒதுக்கிக் கொடுக்க வடக்கும் கிழக்கிலுமுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கம் வகிக்கும் தேசிய பேரவை உறுப்பினர்கள் வழிசெய்ய வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ)

மரண அறிவித்தல்

பொ. பாலசிங்கம்

ஓய்வுபெற்ற அஞ்சல் அதிபர் பொ. பாலசிங்கம் காலஞ்சென்றுவிட்டார். இவர் கண்மணியின் அன்புக் கணவரும், பத்மநாதன், சபாரத்தினசிங்கம், இராசசிங்கம், பாக்கியநாதன், கமலாவதி ஆகியோரின் சகோதரரும் விஜயரத்தினம், திருமதி நடராசா, துரைசாமி ஆகியோரின் மைத்துனருமாவார். பூதவுடல் இல. 107, கோவில் வீதி, நல்லூர். யாழ்ப்பாணத்திலிருந்து மரணச்சடங்குகளுக்காக 78-4-28 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

9159

இசைவிழா இன்றைய நிகழ்ச்சி

[அரியாலை]

நல்லைஞானசம்பந்தர் ஆதீனத்தால் நடைபெற்று வரும் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் 20-வது ஆண்டு தமிழிசைவிழாவின் 8-ம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

மாலை 5-15 மணி அண்ணாமலை இசைக்கல்லூரி மாணவ மாணவிகள் பாட்டு, வீணை. 6-15 செல்வி சக்திதேவி குருநாதபிள்ளை-பாட்டு. 7-15 செல்வி நந்தினி சோமசுந்தரம் -வீணை. 8-15: திருமதி சத்தியபாமா இராசலிங்கம்-பாட்டு.

திரு. கே. சித்திவிநாயகம், திரு. வி. கே. குமாரசாமி ஆகியோர் வயலினும், திரு எம். சிதம்பரநாதன், திரு எஸ். மகேந்திரன் ஆகியோர் மிருதங்கமும் வாசிப்பர். [அ]

விற்பனைக்கு
"மொறிஸ் மைனர்"
EN 8000 தொடர் வரிசை. இரண்டாவது சொந்தக் கார் 17 வருடங்களாக மிக உன்னத நிலையில் விற்பனைக்குள்ளது. 78/4, W.A. சில்வா மாவத்தை, (High Street) வெள்ளவத்தை தொலைபேசி எண்: 86962
9146

தமிழ் அரசாங்க....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகள் திறந்திருந்தது.

சிகிச்சை மறுப்பு

கலவரத்தில் காயமுற்ற சிங்களவர்களுக்கு வவுனியா ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. கலவரத்தையடுத்து வவுனியாவில் ஒரு பிரசுரம் வெளியிடப்பட்டதா? சிங்கள ஊழியர்கள் கூட்டாக வரும்போது வரவேற்புக் கொடுங்கள். அவர்கள் தனித்திருக்கும்போது என்ன செய்யவேண்டும் என்பது தெரியும்தானே'' என்று அந்த தமிழ்த் துண்டுப்பிரசுரத்தில் இருந்தது.

செப்டம்பர் மாதம் 7-ம் திகதி அத்துண்டுப்பிரசுரத்தை நான் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைத்தேன். வவுனியாவில் இனக் கலவரம் மூளுவதற்கு மூல காரணமாயிருந்தது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களின் இனத்துவேஷப் பேச்சுக்கள் தான்''

ஆசிரியர் சாட்சியம்

அந்துடாவ சிவரத்ன தேரோ என்ற வவுனியா காமினி வித்தியாலய ஆசிரியர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''எனக்கு தமிழ் தெரியாது. வவுனியாவில் இனக்கலவரம் ஏற்படுவதற்கு தமிழ்த் தலைவர்களின் வீராவேசப் பேச்சுக்களே காரணம்.

நான் கல்வி கற்பித்த கல்லூரியில் சிங்கள தமிழ் மாணவர்களுடன் தமிழ் ஊழியர்களும் இருந்தனர்.

இவர்கள் மூலமாக தமிழ்த் தலைவர்கள் பேசியதை அறிந்துகொண்டேன்,

உதவ ஊழியர் மறுப்பு

நான் இருந்த விகாரையில் 100 அகதிகள் தஞ்சம் புகுந்தனர். இதில் தமிழர்களும் இருந்தனர். இந்த அகதிகளுக்கு உதவ தமிழ் அரசாங்க ஊழியர்கள் உதவமறுத்தனர் நானும் அவர்களிடம் அதன் பின் உதவுமாறு கேட்கவில்லை.

தமிழ் ஊழியர் சாட்சியம்

கிளிநொச்சியைச் சேர்ந்தவரும் வன இலாகா ஊழியருமான செ. சிவராமலிங்கம் என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ''நான் கிளிநொச்சியில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றிய போது ஆகஸ்ட் 16, 17, 18ம் திகதிகளில் வாடியில் இருந்தவர்கள் என்னிடம் அபயம் கேட்டு வந்தனர்.

ஸ்ரீமதி கெடுக்கப்பட்டாரா

ஸ்ரீமதி என்ற பெண்ணைக் காணவில்லை என்று அந்த அகதிகள் கூறினர். மறுநாள் காலை அந்தப் பெண் வந்தார்

சட்: பரீலட்: அப்பெண் தான் மூவரால் கெடுக்கப்பட்டதாகக் கூறினாரா?

சாட்சி: தான் கெடுக்கப்பட்டதாக அவர் கூறவில்லை பிரஸ்தாப பெண்ணான ஸ்ரீமதியும், அவரது தந்தையும் கமிஷன்முன் சனிக்கிழமை சாட்சியமளிக்க அழைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க உ)

ராணுவப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் புரட்சியில் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

தலைநகர் காபூலில் கடும் சண்டை நடைபெறுவதாகவும், பல அரசாங்கக் கட்டடங்கள் தீப்பற்றி எரிவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன பீரங்கிகள், தாங்கிகள், யந்திரத் துப்பாக்கிகள் போன்றவை புரட்சிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் 50 தாங்கிகளுக்கு மேல் தலைநகரில் காணப்பட்டனவாம். காபூலுடனான தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி தாவூத் 1973-ம் ஆண்டு ராணுவப் புரட்சி மூலம் பதவிக்கு வந்தார்.

மின் விநியோகம்

(வேலணை)

வேலணை கண்ணப்பர்தெரு ஞானவைரவர் ஆலயத்திற்கு இலங்கை மின்சாரசபையினரால் மின்வசதி வழங்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna: Telegram "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in SriLanka.